நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

# S.T.C . No.1470/2024

## P.W. 3 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | குமார் |
| தந்தை / கணவர் பெயர் | : | கெங்கண்ணன் |
| கிராமம் | : | பூதப்பாடி |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 3** |
| வயது | : | 41 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஜுலை மாதம், 09–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–11.40 AM )

1. நான் தற்போது கொளத்தூரில் உள்ள பூதப்பாடியில் குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். சுமார் 1 ½ வருடங்களுக்கு முன்பு மாலை 5.00 மணி அளவில் நானும் என் மனைவியும் தென்ன மட்டை வெட்டுவதற்காக அ.சா1ன் தோட்டத்தில் இருந்தோம். அ.சா1ன் மனைவி அவருடைய தோட்டத்தில்

மாட்டை கட்டி கொண்டு இருந்தார்.

2. அப்போது அங்கு வந்த ஆஜர் எதிரி அ.சா1ன் மனைவியை பார்த்து இங்கே எதுக்கடி மாட்டை கட்டுகிறாய் தேவடியா என்று கெட்டவார்த்தையால் திட்டினார். அந்த இடத்தில் நானும் , என் மனைவி மணிமேகலா இருவரும் இருந்தோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

1. என்ன தேதியில் நான் தென்னை மட்டை வெட்ட சென்றேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. அப்போது மாலை 5 மணி இருக்கும். மாடு கட்டும் இடம் குஞ்சப்பன் நிலத்துக்கு செல்லும் வழியில் தான் உள்ளது என்றால் சரிதான். அந்த தடத்தின் வழியாகத்தான் குஞ்சப்பனும் அ.சா.1 சாந்தா என்பவரும் போய் வருகிறார்கள் என்றால் சரிதான். நான் குடியிருக்கும் இடத்திற்கும் மேற்படி காட்டிற்கும் சுமார் 2 கிலோ மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். நான் தென்னை மட்டை வெட்ட வந்தேன் என்றும் நான் ஏற்படுத்தி இதை பார்த்தேன் என்றும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2. எனக்கு தென்னை மரம் ஏறத் தெரியாது கீழே கிடந்த மட்டை எடுக்கச் சென்றேன். நான் சொல்வதெல்லாம் பொய் என்றாலும் நான் உண்மையில் அங்கு செல்லவில்லை என்றாலும் சரியல்ல. மேற்படி சாந்தா என்பவர் சேர்மனாக இருப்பதாலும் அவருடனே நான் இருப்பதாலும் இந்த வழக்கிற்காக பொய்சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியில்ல.

3. எதிரி வீட்டுக்கு செல்லும் குடிநீர் குழாய் இணைப்பு உள்ளிட்ட தண்ணீர் இணைப்புகளை நான் தான் உடைத்து விட்டேன் என்றால் சரியில்லை. தடம் சம்பந்தமான பிரச்சினை இருப்பதால் எதிரி திட்டி விட்டதாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியில்லை. நானும் எனது மனைவியும் சம்பவ இடத்திலிருந்து பொய் சொல்கிறேன் என்றால் சரியில்ல.

4. காவல்துறை விசாரணையில் நான் கேள்விப்பட்டேன் என்று தான் சொல்லி உள்ளேன் என்றாலும் இந்த நீதிமன்றத்தில் வந்து நேரில் பார்த்ததாக சாட்சியம்

அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியில்லை.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–11.52PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஓம்/–நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**